DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 198/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ரமேஷ் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.வேலுச்சாமி |
| Village | : | ஆப்பிராய் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 22.04.2024

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் ஆப்பிராய் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன பூமிநாதன் எனது மாமா ஆவார்.

எதிரியை தெரியாது.

2. 2023ம் ஆண்டு மாதம், தேதி நினைவில் இல்லை மாலை 06.00 மணியளிவ்ல சனவெளியில் இருந்து ஆப்பிராய் நோக்கி இருசக்கர வாகனத்தில் எனது மாமா பூமிநாதன் சென்று கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் 100 முதல் 200 மீட்டர் துாரத்தில் நான் எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்ததேன்.

3. அப்போது இராமநாதபுரத்திலிருந்து தேவகோட்டை சென்ற Innova கார் ஒன்று அதிகவேகமாக வந்து எனது மாமா பூமிநாதன் சென்ற இருசக்கர வாகனத்தின் பின்புறமாக மோதியது. அதில் எனது மாமாவிற்கு தலையயின் பின்புறமும், கை மற்றும் கால்களில் சிறாய்ப்பு காயங்கள் ஏற்பட்டது. உடனே நான் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்யவும் 108 ஆமபுலன்ஸ் வந்து அவரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின் அங்கு பார்க்க முடியாது என்று சொல்லி மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அவர் அங்கு 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். பின்னர் சிகிச்சை பலனின்றி எனது மாமா இறந்துபோய்விட்டார்.

4. விபத்து நடந்த சமயத்தில் மேற்படி Innova வாகனத்தை ஓட்டி வந்த நபரை தற்போது அடையாளம் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். விபத்து சம்பந்தமாக காவல் நிலையம் சென்றிருந்தபோது கையெழுத்து கேட்டார்கள் கையெழுத்து செய்தேன். புகார்மனுவில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. **(புகார்மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் நடந்தது தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலை இரண்டு பேருந்துகள் செல்லக்கூடிய அளவிற்கு அகலமான சாலை என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை தார் சாலை என்றால் சரிதான்.

2. யார் சொல்லி சம்பவ இடத்திற்கு சென்றீர்கள் என்றால் நான் எனது இருசக்கர வாகனத்தின் பூமிநாதன் பின்னால் சென்றேன். சத்தம் கேட்டு தான் விபத்தை பார்த்தீர்கள் என்றால் நான் விபத்தை நேரடியாக பார்த்தேன். நான் சுமார் 200 மீட்டர் துாரத்தில் வந்தேன் என்றால் சரிதான்.

3. 200 மீட்டர் துாரத்தில் இருந்து விபத்தை பார்த்ததால் யாருடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் கார் டிரைவரால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது. எதிரியின் பெயர் விலாசம் போலிசார் சொல்லி தான் எனக்கு தெரியும்.

4. விபத்தில் இறந்த நபர் எனது மாமா என்றால் சரிதான். போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை தான் விசாரித்தார்கள்.

5. காரின் எந்த பாகம் இருசக்கர வாகனத்தின் எந்த பாகத்தில் மோதியது என்று புகார்மனுவிலோ, போலிசார் விாசரணையிலோ சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. இருசக்கர வாகனத்தில் வலதுபுறம் சைடு பகுதி சேதம் ஏற்பட்டது.

6. 108 ஆம்புலன்சிற்கு அண்ணன் உலகநாதன் போன் செய்தார். இறந்துபோன நபருக்கு வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் உள்ளதா என்றால்

எனக்கு தெரியாது. பூமிநாதன் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு காப்பீடு உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. இறந்த நபரின் இருசக்கர வாகனத்தில் முன்பக்கம் தான் சேதம் ஏற்பட்டுள்ளது அந்த வகையில் விபத்தில் இறந்துபோன நபர் தவறான பக்கத்தில் வந்ததால் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் விபத்தில் இறந்துபோனவர் எனது மாமா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>